வருத்தம் தெரிவித்துப் பிரசுரித்துவிட்டால், அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது கைவிடப்படுகிறது என்ற முறையை நாம் பின்பற்றுகிறோம். அப்படி விடுவதால் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் வளர்கின்றன. இப்படித் தவறான செய்திகளைப் பத்திரிகைகளில் போட்டிருந்தால், பத்திரிகைகள்மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கட்சித் தலைவர்கள், பேரவைத் தலைவர் எல்லோரும் கூடி ஒரு முடிவு எடுப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். இப்பொழுது பத்திரிகையின் மீது நடவடிக்கை எடுக்கும்பொழுது பத்திரிகை ஆசிரியர் "அமைச்சர் இவ்வாறு கூறினர், எங்களுடைய நிருபர் கேட்டார், அதன்படி பிரசுரம் செய்தேன்" என்று சொல்லி விட்டால், என்ன நடவடிக்கை எடுக்கபடும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவா பாயிண்டு ஆப் ஆர்டர் ?

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆகவே அமைச்சர் அவர்கள் மீதும், பத்திரிகை மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்டு ஆப் ஆர்டர் அல்ல.

3. நடைமுறைக் கேள்விகள்

(அ) என்.சி.சி. அணியை மீண்டும் துவக்குவதுபற்றி மத்திய அமைச்சருடன் நடந்த பேச்சுவார்த்தைபற்றி அவைக்கு முன்னதாக தகவல் அளிக்காமை.

DR. H. V. HANDE : On a point of order, pertinent point of order, Sir. For the past three days, day before yesterday, yesterday and today the Assembly has been sitting. In Hindu, Indian Express and yesterday's 'Mail', it had been published that with regard to starting of N.C.C. in Madras, a meeting had taken place between the Union Deputy Minister and our Chief Minister and Education Minister and that a statement on the same would be issued on Friday morning. Till now we do not have any light on that statement. This issue is a very important one. It is absolutely essential, that when the House is in session, the House should be taken into confidence and information should first be given to the House. We are happy that the meeting had taken place and we are going to have N.C.C. back in Madras. If the Hon. Chief Minister could let us know what has happended we will be very happy to know all about the same.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. கிருஷ்ணா அவர்கள் என்னையும், கல்வி அமைச்சரையும் சந்தித்து, என்.சி.சி. சம்பந்தமாகத் தமிழக அரசினுடைய

எண்ணத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை எங்களிடம் தெரிவித்திருப்பதை அவரே பத்திரிகைகளில் செய்தியாகக் கொடுத்திருக்கிருர்கள். சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் நாங்கள் பத்திரிகை நிருபர்களுக்கு அந்தச் செய்தியைக் கொடுப்பது முறையல்ல என்ற காரணத்தினுல் எந்தச் செய்தியும் பத்திரிகைகளுக்கு நாங்கள் அளிக்கவில்லை. பத்திரிகை நிருபர்கள் அவர்களைச் சந்தித்த நேரத்தில் மாண்புமிகு திரு. கிருஷ்ணு அவர்கள் அந்தச் செய்தியைத் தந்திருக்கிருர்கள். எங்களைச் சந்தித்த விவரத்தையும், மத்திய அரசு அதற்கு ஒப்புக் கொண்ட விவரத்தையும் அவர்கள் கொடுத்திருக்கிருர்கள். அதைத் தொடர்ந்து நிருபர்கள் என்னிடம் வந்து விளக்கம் கேட்டார்கள். நாளையதினம் இது பற்றி சட்டமன்றத்தில் அறிக்கை வைக்கப்படும் என்று நான் கூறியது உண்மை. ஆனல், அப்படி ஒரு அறிக்கை வைப்பதற்குத் தயங்குவதற்குக் காரணம், திரு. கிருஷ்ணு அவர்கள் அதை மத்திய அரசு ஒத்துக்கொண்டதாக எங்களிடம் கூறிச் சென்ருலும், உடனடியாக அங்கிருந்து கடிதம் வரும் என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கடிதம் வராமல் அதன் மீது ஒரு அறிக்கை வைப்பது முறையல்ல என்ற காரணத்தினுல் அந்த அறிக்கை வைக்கப்படவில்லை. கடிதம் வராமல் இருந்துவிடாது. நிச்சயம் வரும். எதிர்பார்த்த கடிதம் வராமல் அறிக்கை வைப்பது முறையல்ல. கடிதம் வந்த பிறகு அறிக்கை வைப்பது தான் முறை. இந்தப் பிரச்னையில் வெற்றி பெற்றிருக்கிறேம் என்கின்ற அளவில் நாம் மகிழ்ச்சி அடைவோமாக!

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகர் அவர்களே, வெற்றி என்னவென்று சொன்னல் கொஞ்சம் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு மத்திய அரசு அமைச்சர் திரு. கிருஷ்ணு அவர்கள், தமிழக அரசின் சார்பில் எடுத்துச் சொல்லப்பட்ட, என்.சி.சி. படையில் என்ன நிலை அனுஷ்டிக்கப்படவேண்டும் என்று கோரப்பட்ட கொள்கைகளை மத்திய அரசு ஒத்துக்கொண்டது என்று குறிப்பிட்டார்கள். அது தான் இன்னும் கடிதம் மூலம் வரவில்லை. இங்கு அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது இந்தப் பேரவையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. என்.சி.சி.-யில் இந்தி கட்டளைச் சொற்கள் கூடாது. இந்திக் கட்டளைச் சொற்கள் இருக்குமானல், அதை வலியுறுத்துவார்களேயானல், என்.சி.சி. படை கலைக்கப் படும் என்கின்ற அளவில் இங்கு எடுத்துக் கூறப்பட்டது. இப்பொழுது ஓராண்டுக் காலமாக அவர்கள் இந்திக் கட்டளைச் சொற்கள் இருக்கவேண்டும் என்று வாதாடினர்கள். நானும், மற்ற அமைச்சர்களும் மத்திய அரசு அமைச்சர்களோடு அதைப்பற்றி வாதாடியிருக்கிறேம். இறுதியாக அவர்கள் இந்திக் கட்டளைச் சொற்கள் இருக்காது. அதற்குப் பதிலாக ஆங்கிலக் கட்டளைச் சொற்கள் தான் இருக்கும் என்று ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். மற்ற விவரங்களெல்லாம் கடிதம் வந்தபிறகு தெரிவிக்கப்படும்.

திரு. கே. விஞயகம்: சார், ஆன் எ மாட்டர் ஆப் கிளாரிபிகேஷன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் மத்திய அரசிடமிருந்து கடிதம் வரவில்லை. இன்னும் அறிக்கை வைக்கப்படவில்லையே?

THIRU K. VINAYAKAM : Please allow me.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களே, அங்கிருந்து முறையாகக் கடிதம் வந்த பிறகுதான் அறிக்கை வெளியிட வேண்டும் என்று கூறியிருக்கிருர். அப்படிக் கூறியிருக்கிற நேரத்தில், அறிக்கை வெளியிடத் தயக்கம் இருக்கிற நேரத்தில், இதைப் பற்றி மேலும் பேசி விவாதத்திற்கு உள்ளாக்குவது நல்லது அல்ல. அவை முன்னவர் அவர்கள் இப்பொழுது ஒரு தீர்மானம் கொண்டு வருவார்கள்.

(ஆ) எலி நாற்றம்.

திரு. கே. விஞயகம்: ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார். இரண்டு மூன்று நாட்களாகச் சட்டசபை நடக்கிறது. இங்கே அங்கத்தினர்கள் மாத்திரம்தான் வரலாம் என்ற சட்டம் இருக்கிறது. ஆனல், அங்கத்தினர்கள் அல்லாத ஒரு சில எலிகள் இங்கு உலாவிக் கொண்டு வருகின்றன. நானும் பார்த்தேன். உறுப்பினர் திரு. பால சுப்பிரமணியன் அவர்களும் பார்த்தார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. விஞயகத்தைத் தேடி அது வருகிறது போலும்!

திரு. பி. ஜி. கருத்திருமன்: விஞயகத்தைத் தேடி பெருச்சாளி தான் வரும். எலி வராது.

THIRU K. VINAYAKAM : I am still in possession of the House. Nobody has got any right to interfere when I am speaking.

அந்த எலிகள் இறந்து போனவைகள். அதுதான் இப்பொழுது பேச்சு. நாற்றம் வருகிறது. ஆளும் கட்சிக் கொறடா அவர்கள்கூடச் சொன்ஞர்கள். அதை அப்புறப்படுத்திவிட்டு, அப்புறம் சட்டசபையை நடத்துங்கள்.

It is emanating a dirty smell, you must come and sit down here. (Laughter.)

திரு. எ. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, என் கண்ணுக்கு, எலிகள் படவில்லை. விஞயகரின் வாகனம் எலி, மூஞ்சூறு. ஒரு வேளை அது அவர் காலுக்கு அடியில் எங்கேயாவது இருக்கலாம். அதைக் கவனித்து அப்புறப்படுத்த உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.